ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
வைகாசி

JUNE
1971

தொகுதி 33
பகுதி 6

Vol. 33
No. 6

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் T. S ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

கற்புச் சிதைவு ... 101

ஆரோக்கிய கல்பத்துருமம் ... 103

Annual
Subscriptio
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

THE ARYA VAIDYA SALA KOTTAKAL

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

நர்ஸிங்ஹோம்	போன் நெ. 44
தலைமை வைத்யர்	போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி	(வீடு) போன் நெ 27
	(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர்	(வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலே, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ:
31, A. சின்னக் கடைத்தெரு
திருச்சிராப்பள்ளி—2.

Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும்

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 5-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங் டைரக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram : KALIA | **Phone : Office - 3232**
Resi - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி : KALIA | போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

உண்மையான ஆயுர்வேத
மருந்துகளுக்கும்
சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள் :

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி :	போன் : 585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,, 2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,, 85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18	,, 32219
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,, 92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,, 195
7.	கடைவீதி, பொன்னானி	,, 41
8.	ரௌண்ட் வெஸ்டு திருச்சூர்-1	,, 378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,, 87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு	
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18,	,, 33758
12	இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2	,, 4891
13	229 ராஜவீதி, கோயமுத்தூர்-1	,, 33988
14.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2	
15	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)	

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களேயும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினுல் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளேயும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலேவலி முதலிய கோளாறுகளேயும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினுல் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலே 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைஞபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் திறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS

(REGD)

**Wholesale Musk, Saffron and Indian Drugs
Merchants,**

LUDHIANA ~ PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 33	விரோதிகிருது வைகாசி	பகுதி 6
Vol. 33	1971 ஜூன்	No. 6

நம: சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

கற்புச் சிதைவு.

ஒரு ஊரில் ஒருவரைத் தேள் கொட்டியது. வலி தாங்க முடியவில்லை. பலபேர் விஷத்தை இறக்க முயன்றும் மருந்து போட்டும் விஷம் இறங்கவில்லை சாதாரணமாக தேள்கடி மந்திரம் முதலியவற்றில் சில உண்மைகளைச் சொல்லி பாடம் போட்டால் விஷம் இறங்குவது வழக்கம். இதை மனதில் கொண்டு ஒரு மந்திரவாதி இந்த ஊரில் ஏதாவது உண்மையான அதிக்ரமம் உண்டா? அதைச் சொல்லி பாடம் போட்டால் விஷம் இறங்கும். கூறுங்கள், என்று கேட்டான். வலி தாங்காதவன் பின்வருமாறு கூறினான். எங்கள் நாட்டில் ஸ்திரீகளை கற்பழித்தல் குற்றமாகாது என்று அரசன் உத்திரவு போட்டுள்ளான். இதுதான் எனக்குத் தெரிந்த வரை மிகப்பெரிய அதிக்ரமமான உண்மை என்று, உடனே மந்திரவாதி இந்த உத்திரவு உண்மையானால் விஷம் இறங்கட்டும் என்று பாடம் போட்டான். விஷம் இறங்கி நோயாளி சுகம் அடைந்தான்.

தேள் விஷம்கூட இந்தப் பெரிய அதிக்ரமத்தைக் கண்டு பயப்பட்டு ஓடிவிட்டது என்று ஏற்படுகிறதல்லவா?

நமது ராஜாங்கத்தில் கர்ப்பச்சிதைவு சட்டரீதியாக செல்லக் கூடியது என்பதாக ஏற்பட்டு உள்ளது. இது உலகத்திற்கோ

நாட்டிற்கோ ஏதோ சில அம்சத்தில் நல்லதாக இருக்கலாம். ஆனால் ஸ்திரீகள் புராதனமான தர்மத்தை அழிப்பதற்கு இது ஒரு கோடரியாக உபயோகப்படும்.

தவிர இஷ்டப்பட்டால் கர்ப்பம், இல்லாவிட்டால் வெளிப் படுத்துதல் என்று வரும்போது இயற்கைக்கு விரோதமான செய்கையால் உடல் நலம் கெட்டுவிடும். ஏதோ சில மேல் நாடுகளில் இருக்கக் கூடிய பழக்க வழக்கங்களை நாம் அப்படியே கைப்பிடிப்பது என்பதும் மூடத்தனமாகும். பாரத தர்மம் என்பது மிகப் பெரிய ஆழமான அஸ்திவாரத்துடன் ஏற்படுத்தப்பட்ட கட்டடம் ஆகும். அதைத் தகர்த்து எறிந்து விட்டால் பிறகு மறுபடியும் உருவாக்குவது இந்த யுகத்தில் சாத்தியமான விஷயம் அல்ல. சாதக பாதகங்களை முற்றிலும் யோசிக்காமலும் இந்துக் களுடைய நன்மைகளைக் கருதாமலும் சட்டங்களை இயற்றுவது சரியல்ல. இந்த சட்டத்திற்கு எதிர்ப்பு இருந்த போதிலும் கூட தற்போதுள்ள நிலையில் ஆளுங்கட்சியின் மெஜாரிட்டி எதை வேண்டுமானாலும் சாதித்துவிடலாமல்லவா? ஜனத்தொகை அபிவிருத்தியைக் குறைப்பதும் கர்பிணியின் உயிரைக் காப்பதும் சட்டத்தின் நோக்கமாக இருந்தால் அது மிருகத்தனமான காரியமாகத்தான் முடியும். ஒழுக்கம் பிரமசரியம் இவைகளைப் பிரசாரம் செய்து இதனால் தேசத்திற்கு வேண்டிய க்ஷேமங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் தவறான வழியில் காரியங்களைச் செய்ய முற்படுதல் கூடாது. கர்ப்பச் சிதைவு நம்தேசத்தில் ப்ரூண ஹத்தி என்ற மகாபாபமாக கணக் கிடப்பட்டுள்ளது. இது மிகக் கொடியதொரு பாபம். இதற்கு எவ்வளவு பெரிய பிராயச்சித்தங்கள் செய்தால் தீரும் என்று கூறப்பட்டிருக்கிறது. தர்ம சாஸ்திரத்திற்கும் ஜனங்கள் வாழ்க் கைக்கும் இம்மையிலும் மறுமையிலும் தொடர்பு உண்டு என்பதை நாம் மறத்தல் கூடாது.

சந்தாதாரர்கட்கு ஓர் வேண்டுகோள்

1971-ம் ஆண்டு சந்தா ரூ. 5/- (ரூபாய் ஐந்து) இம்மாதம் 20-ம் தேதிக்குள் அனுப்பி வைக்கும்படி கோரப்படுகிறது. அவ் விதம் அனுப்பாதவர்கட்கு ஜுலை மாத இதழை வி. பி. மூலம் அனுப்பி வைக்கப்படும். வி. பி. செலவு ரூ. 1–40ஐ தவிர்ப்பதற்கு மணியார்டர் மூலம் ரூ. 5/-ஐ உடனடியாக அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

திருச்சி
4—6—71

ஏ. ராகவ ராவ்,
காரியதரிசி.

ஆரோக்கிய கல்பத்துருமம்

பால சிகித்ஸை

[தமிழ் மொழியாக்கம்]

மூன்றுவது அத்யாயம்

ஜ்வரம் விட்ட பிறகு : ஜ்வரம் விட்ட பிறகு பத்யமான ஆகாரம் நடவடிக்கைகளுடன் ஒரு வாரம் வரை சிசுவைப் பாதுகாத்து, பிறகு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டவேண்டும். ஜ்வரம் நன்கு விலகிவிட்டதென்பதை மஹரிஷிகளால் கூறப்பட்ட அறிகுறிகளிலிருந்தும் அறிந்துகொள்ளவேண்டும். சூடு தணிந்து விடுதல், அசதி நீங்குதல், உறுப்புகள் லேசாக இருத்தல், கண் பார்வை முதலியவை தெளிதல், ஹிருதய வேதனை அடங்குதல், மனது தெளிந்து இயற்கை நிலையை அடைதல், தும்மல், தலையில் அரிப்பு, அன்னத்தில் விருப்பம் இவை ஜ்வரம் நீங்கியதற்கான அறிகுறிகளாகும்.

குளிப்பாட்ட எண்ணெய்: தேங்காய் எண்ணெய் 1 லிட்டர், நெய் சட்டிப் பூண்டின் சாறு முக்கால் லிட்டர், தயிர் தெளிவு 3 லிட்டர், கல்கத்திற்காக வெட்டிவேர், விலாமுச்சம் வேர், சந்தனம், அதிமதுரம், கோஷ்டம், ஏலரிசி, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, வசம்பு, சரள தேவதாரு, பச்சிலை இவை வகைக்கு 25 கிராம் இவைகளை தைலபாக முறைப்படி காய்ச்சி வடிகட்டி சிசுக்களுக்கு எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டலாம். மூன்று வயதிற்கு மேற்பட்டு தேங்காய் எண்ணெய்க்கு பதில் நல்லெண்ணெய் சேர்க்கலாம்.

முஸ்தாதி தைலம்: தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் 1 லிட்டர், கஷாயத்திற்கு கோரைக்கிழங்கு, வில்வ வேர், சித்தாமுட்டி வேர், சீந்திற்கொடி, தேவதாரு, அதிமதுரம், வேங்கை வைரம், முடக்கத்தான் இவை வகைக்கு 180 கிராம் எடுத்து இடித்து 12 லிட்டர் ஜலத்தில் கஷாயமிட்டு 3 லிட்டர் மீதமாகக் காய்ச்சி வடிகட்டிய திரவம்; மோர் முக்கால் லிட்டர்; நெய்சட்டிப்பூண்டின் சாறு முக்கால் லிட்டர்; கல்கத்திற்காக திரிபலை, தேவதாரு, அதிமதுரம், ஸரள தேவதாரு, சந்தனம்,

சித்தரத்தை, அமுக்கராக்கிழங்கு, தக்கோலம், மஞ்சிட்டி, பதிமுகம், இவை வகைக்கு 25 கிராம்; இவைகளை முறைப்படி காய்ச்சி தைலம் வடித்து உபயோகிக்கலாம். முன் முறையைவிட மிகவும் சிறந்தது.

திரிபலர்தி தைலம்: நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் 1 வீசை, திரிபலை கஷாயம் 3 படி, தயிர் தெளிவு முக்கால் படி, ஜடாமாஞ்சி, கோஷ்டம், குந்துருக்கம், செஞ் சந்தனம் இவை வகைக்கு 5 தோலா இவைகளை முறைப்படி தைலமாகக் காய்ச்சி வடிகட்டி, தேய்த்து ஸ்னானம் செய்விக்க, முறை ஜ்வரம், சளி, தலைவலி, தொண்டைக்கம்மல் இவை நீங்கும்.

ஸுஷவி தைலம்: நல்லெண்ணெய் ஒரு வீசை புல்லானி (மலையாளத்தில் கிடைக்கும் கொடியின்) சாறு முக்கால் படி; மோர் முக்கால் படி; வெண்கோஷ்டம் 15 தோலா தூள் செய்து அரைத்துக் கலக்கி தைலம் காய்ச்சி உபயோகிக்க நல்லது.

ஸ்னானம் செய்விக்க வென்னீர்: ஏழிலம்பாலை இலை, அரசின் இலை, புங்கிலை, அரளி இலை இவைகளைப்போட்டு கொதிக்க வைத்த வென்னீரில் உடல் ஏற்கும் சூட்டில் கழுத்திற்குக் கீழ் குளிப் பாட்டலாம், அல்லது ஆல், வன்னி, வேம்பு, இலந்தை இவை களின் இலைகளையோ; சிற்றுமணக்கு இலை, விளாமுச்சம் வேர், விருக்ஷி இலை இவைகளையோ, பழுத்த பலா இலையையோ போட்டு வென்னீர் கொதிக்க வைத்து அதனால் ஸ்னானம் செய்விக்கலாம்.

தலைக்கு ஆறிய நெல்லிக்காய் போட்ட வென்னீரால் தலையில் ஸ்னானம் செய்விக்கவேண்டும். தலையிலுள்ள எண்ணெய்யை சிற்றுமுட்டியின் தண்டுக் கல்கத்தால் தேய்த்துப் போக்கிக்கொள்ள வும். உடலிலுள்ள எண்ணெய்ப் பசையை பயறு மாவினால் தேய்த்து அகற்றிக்கொள்ளவும். தலைக்கு நெல்லிமுள்ளியையும் சித்தரத்தையையும் பொடித்துத் தேய்த்துவிடவும்.

ஸ்னானம் செய்த பின்: ஸ்னானம் செய்தவுடன் ஜ்வரஹரமான முன் கூறப்பட்ட ஏதாவதொரு மாத்திரையை கோரைக்கிழங்கும் சுக்கும் சேர்த்து வைத்த கஷாயத்தில் கரைத்துக் கொடுக்கவும்.

நெய்சட்டிப் பூண்டின் சாறும் மோரும் சம அளவில் எடுத்து அதில் திரிகடுத்தூள் அரைத்துக் கலக்கி இந்துப்பு சேர்த்துக் காய்ச்சி மோர்க்கடியாக்கி கொடுக்கலாம். பிறகு லகுவான எளி தில் ஜீரணிக்கக் கூடியவாறு அன்னத்தை ருசியுண்டாக்கும் மற்ற வியஞ்சனங்களுடன் கொடுக்கலாம். புளிக்காத மோரும் (சுக்கும் சிறுகாஞ்சூரிவேரும் போட்டுக் காய்ச்சியது) கொடுக்கலாம்.

எளிதில் ஜீரணமாகாததோ, அதிக அளவிலோ, புளித்து விடக் கூடியதோ, புதிய வெல்லம், ஆநூபமாம்ஸம் தயிர் நெய் இவைகளையோ கொடுக்கக் கூடாது.

அஜீரணமேற்பட்டால் அதை தொடர்ந்து தாதுக்களுக்குள் மறைந்திருக்கும் ஜ்வரம் மறுபடியும் தலை யெடுக்குமாதலால் அக்னிமந்தமுள்ள சிசுவை அஜீரணமேற்படாமல் பாதுகாக்க வேண்டும். ஜ்வரத்தால் இளைத்து மனோபலமும் சரீரபலமும் குன்றி தாதுக்கள் திரும்ப வளராத நிலையிலுள்ள சிசு மறுபடியும் ஸ்வபாவ நிலையை அடையும் வரை இப்பாதுகாப்பு அவசியம். கிரமமாகத்தான் ஆகார அளவை அதிகரிக்க வேண்டும். தினமும் அவனுக்குக் குளிப்பாட்டவேண்டும். ஏழு நாட்களுக்குப் பிறகு அவனுக்கு மோர்கூட்டிக் காய்ச்சிய தைலம் தேய்த்து ஸ்னானம் செய்விப்பது நல்லதல்ல வாதலால் வேறு தைலங்கள் கீழ்க்கண்ட முறையில் தயார் செய்து கொள்ளலாம்.

அச்வத்த வில்வாதி தைலம்: அரசிலை, வில்வ இலை, ஆடாதோடையிலை, மலையமுக்கி இலை, கையாந்தகரை இவைகளின் சாறு வகைக்கு முக்கால்படி, தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் ஒரு வீசை; கல்கமாகஜடாமாஞ்சி, அமுக்கராக் கிழங்கு, ஏலரிசி, ஸரளதேவதாரு, விளாமுச்சம் வேர், சந்தனம், திரிபலை, அதிமதுரம், இவை வகைக்கு 2 தோலா, இவைகளைக் கலந்து காய்ச்சி வடிகட்டித் தேய்த்துக் குளிப்பாட்ட தோல் மெதுவாகும். பலம், புஷ்டியளிக்கும்.

பலாகுடுச்யாதி தைலம்: சிற்றுமுட்டி, சீந்திற்கொடி, கருவேலம்பட்டை, அதிமதுரம், சந்தனம், வகைக்கு 24 தோலா; 12 படி ஜலத்தில் 3 படி மீதமாகும் படி கஷாயம், நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் 1 வீசை; கல்கமாக—அதிமதுரம், கோஷ்டம், வெட்டிவேர், பதிமுகம், விளாமுச்சம்வேர், வாய் விடங்கம், கோரைக்கிழங்கு, ஏலரிசி, திரிபலை, வெட்பாலையரிசி, கொத்தமல்லி விதை, வாலுளுவை விதை, கார்போகரிசி, அமுக்காரக்கிழங்கு, ஸரளதேவதாரு வகைக்கு 2 தோலா, இவைகளை தைலமாகக் காய்ச்சி வடிகட்டி தேய்த்து ஸ்னானம் செய்விக்கவும். இது முன் தைலத்தைக் காட்டிலும் குணத்தில் சிறந்தது.

சதாவர்யாதி தைலம்: நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் 1 வீசை, தண்ணீர் விட்டான் கிழங்கின் சாறு 3 படி; கல்மாகஜடாமாம்ஸி, கோஷ்டம், சித்தரத்தை, தகர விதை, சந்தனம், குந்துருக்கம், அமுக்கராக்கிழங்கு, ஏலரிசி, ஸரளதேவ

தாரு வகைக்கு 3 தோலா ; இவைகளைத் தைலமாக்கித் தினமும் தேய்த்துக் குளிக்கலாம். தண்ணீர் விட்டான் கிழங்கின் சாற்றுக்குப் பதிலாக நெல்லிக்காயின் சாறு போட்டும் தைலம் காய்ச்சலாம்.

பலா மூலாதி தைலம்: சிற்றுமுட்டி, தண்ணீர் விட்டான் கிழங்கு, வில்வ வேர், சீந்திற் கொடி, தேவதாரு, சந்தனம் இவை வகைக்கு 20 தோலா ; 12 படி ஜலத்தில் 3 படி மீதமாகக் கஷாயம் ; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் 1 வீசை ; கல்கமாக மஞ்சிட்டி, கோஷ்டம், கோரைக்கிழங்கு, அதிமதுரம்; நன்னாரி, ரஸாஞ்சனம், தக்கோலம் கடுகுரோகிணி, அகில், சந்தனம், திரிபலை, வெட்டிவேர், விளாமுச்சம் வேர், ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, பூலாங்கிழங்கு, இவை வகைக்கு ஒரு தோலா ; தைலம் வடிக்கவும்.

ஜ்வரம் விட்டவனுக்கு கண்ணிற்கும் கேசங்களுக்கும் மேதைக்கும் பலமளிக்கக் கூடியது உடலை புஷ்டியாக வளர்க்கக் கூடியது. நல்ல காந்தியும் மென்மையும் அளிக்கக் கூடியது.

ரத்தக் குறைவு மிகுந்திருந்தால், ரக்தவிருத்தியும் ரக்த சுத்தியுமளிக்கக் கூடியவைகளைக் கொண்டு தைலம் வடித்து தலைக்குத் தவிர மற்றபாகங்களில் தேய்த்து ஸ்னானம் செய்விக்கவும்.

லாக்ஷாதி தைலம்: கொம்பரக்கு, நன்னாரி, வெம்பாடம் பட்டை, சித்தாமுட்டி, மஞ்சள், மரமஞ்சள் இவை வகைக்கு 20 தோலா. 12 படி ஜலத்தில் கஷாயம் மிகுதி 3 படி ; நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் ஒரு வீசை ; கல்கமாக மஞ்சிட்டி, கோஷ்டம், விளாமுச்சம் வேர், மூக்கரட்டை வேர் இவை வகைக்கு 5 தோலா ; பசுவின்பால் ஒன்றரைப்படி தயிர் தெளிவு ஒன்றரைப்படி ; தைலம் வடிக்கவும்.

தினந்தோறும் தேய்த்துக் குளிப்பாட்ட நல்லது.

ஸாரஸ்வத கிருதம்: நல்ல அக்னிபலம் வந்த பிறகு அவனுக்குக் கீழ்க்கண்ட முறைப்படி ஸாரஸ்வத கிருதம் தயார் செய்து கொடுக்கவும்.

கடுக்காய், திரிகடு வட்டத்திருப்பி, வசம்பு, முருங்கப்பட்டை, இந்துப்பு இவை வகைக்கு 4 தோலா ; பசுவின் நெய் 1 வீசை, ஆட்டுப்பால் $\frac{3}{4}$ படி ; (ஜலம் 3 படி) இவைகளை நெய் பாகமுறைப்

படி காய்ச்சிக்கொள்ளவும். இதைச் சிசுவிற்கு கொடுத்து வர புஷ்டி, உடல் வலிவு, வனப்பு, ஆயுள், அக்னிபலம், பேச்சுத் திறன், ஞாபகசக்தி மேதை இவைகளை அளிக்க வல்லது. இது பாலர்களுக்கு மிகச்சிறந்த ரஸாயனமாகும்.

பிப்பல்யாதி இருதம்: நெய் 1 வீசை, திப்பிலி, வெட்பாலை யரிசி, திராக்ஷை, மூவிலை வேர், நெல்லிக்காய், நன்னாரி வேர், புத்தரிச்சுண்டை வேரின் மேல் தோல், கீழாநெல்லி, வில்வவேர் வேப்பம்பட்டை, சந்தனத்தூள், ஜாதிப்பூ, (பிச்சிப்பூ) ஓரிலை வேர், அதிவிடயம், விலாமுச்சம் வேர் இவை வகைக்கு 2 தோலா; ஜலம் 3 படி; நெய் பாகமுறைப்படி காய்ச்சவும்.

தினம் கொடுத்துவர, உட்காங்கை, சீர்கெட்ட ஜீர்ணசக்தி, காமாலை, உடல் உலர்ந்து போதல், அரோசகம், பக்கவலி, தலை வலி, வாந்தி இவைகளைக் குறைக்கும்.

பரஸ்பர விரோதமுள்ள இருவியாதிகளில் ஒன்ருக ஜ்வரம் ஏற்பட்டு ஜ்வரத்திற்கு சிகித்ஸை செய்யவேண்டி வந்தால், கூட வந்த வியாதிக்கு விரோதமின்றி ஜ்வரத்திற்கு சிகித்ஸை செய்ய வும். ஜ்வரம் துர்பலமாக இருந்தாலும், பிரபலமாக இருந்தாலும் ஜ்வரம் ரோகங்களில் பிரதானமானதால், அதற்கே முக்கியமாக சிகித்ஸை செய்யவேண்டும்.

விஷமருந்தியதால் ஏற்பட்ட ஜ்வரத்தில் ஆமாசயத்திலுள்ள விஷத்தை வாந்திக்குக் கொடுத்து வெளியகற்ற வேண்டும். குட லில் சேர்ந்துவிட்டால் அதை பேதிக்குக் கொடுத்து வெளியகற்ற வேண்டும். பிறகு வாதாதிகளின் நிலைகளுக்கேற்றவாறு சிகித்ஸை செய்யவேண்டும். வாந்திக்கோ, பேதிக்கோ கொடுக்க முடியாத நிலையில் சமனமான முறையில் சிகித்ஸை செய்ய வேண்டும்.

விஷ ஜ்வரங்களில் சிகித்ஸை: முன்னை வேர், திப்பிலி, வில்வ வேர், உள்ளிப் பூண்டு இவைகளைக் கஷாயம் செய்து சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம். கருநொச்சி வேர், எருக்கம்பழுப்பு, கோரைக்கிழங்கு, புங்கன் பட்டை' சங்கபுஷ்பி வேர் இவைகளின் கஷாயத்தையும் கொடுக்கலாம். வெளுத்த விருச்சி வேர், கடுகு ரோஹிணி, கோரைக்கிழங்கு, பர்படகம் இவைகளின் கஷாயத்தை திப்பிலித்தூள் மேம்பொடி போட்டுக்கொடுக்கலாம். கோரைக் கிழங்கு, அவுரி வேர், மூவிலை வேர், வட்டத்திருப்பி, கருநொச்சி வேர், விலாமுச்சம் வேர், பர்படகம், சுக்கு இவைகளைக் கொண்டு கஷாயத்தை வைத்து திப்பிலி மேம்பொடி போட்டுக்கொடுக்கலாம்.

விஷ்ணுக்கிராந்தி, சித்தாமுட்டிவேர், வில்வ வேர், நெய்ச் சட்டிப் பூண்டு, திரிபலே, கோரைக்கிழங்கு, பர்படகம், சுக்கு இவைகளைக் கஷாயமாக்கிக் கொடுக்கலாம். முன் கஷாய யோகங் களைக் காட்டிலும் குணத்தில் இது சிறந்தது. இந்த யோகங்கள் விஷத்தைச் சாப்பிட்டதால் ஏற்படும் ஜ்வரங்களில் மிகச் சிறந்தவை.

அடிபட்டதால் ஏற்பட்ட ஜ்வரத்தில்: சுக்கு, கோரைக்கிழங்கு, ஜீரகம், புஷ்கரமூலம், சித்தாமுட்டிவேர், நிலவேம்பு இவைகளை 12 பங்கு ஜலமும், 4 பங்கு பாலும் சேர்த்துக் கஷாயமிட்டு பால் மீதமாகும்படி காய்ச்சி வடிக்கட்டி சர்க்கரை சேர்த்து சாப்பிட நல்லது.

மூங்கில் குருத்து, கோரைக்கிழங்கு, யானைவணங்கி இலை, கரும்பு, நிலவேம்பு, வில்வம், தேவதாரு, சித்தாமுட்டி, பேரா முட்டி, மூக்கரட்டை வேர், சீந்திற்கொடி, பர்படகம், திராக்ஷை, காட்டுப்பயறு வேர், காட்டுளுந்து வேர் இவைகளைக் கஷாயமிட்டு திப்பிலியும், ஜீரகமும் அல்லது சர்க்கரை மேம்பொடி போட்டுக் கொடுக்க பலத்த அடி—தாக்குதல் இவைகளால் ஏற்பட்ட ஜ்வரத்தில் நல்லது.

அபிஷங்க ஜ்வரத்தில்: சிறுதேக்கு, புஷ்கரமூலம், கோரைக் கிழங்கு, பர்படகம், சங்க புஷ்பிவேர், தேவதாரு, கடுகுரோகிணி, உள்ளிப்பூண்டு இவைகளைக் கஷாயமிட்டு, சர்க்கரையோ, தேனோ சேர்த்துக்கொடுக்க காமம், கோபம், சோகம் முதலியவைகளில் ஏற்படும் அபிஷங்க ஜ்வரத்தில் நல்லது.

சேங்கொட்டை-காஞ்சூரி பட்டு ஏற்படும் ஜ்வரத்தில்: தலைவலி, சிகப்பு மண்டலம், அரிப்பு, வீக்கம் இவைகளுடன் ஏற்படும் ஜ்வரத்தில் தான்றிக்காயைக் கஷாயமிட்டு சர்க்கரை, ஜீரகத்தூள் தேன் சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது கொம்பரக்கு, சிறு காஞ்சூரிவேர், கோரைக்கிழங்கு, தான்றிக்காய்த்தோல் இவை களைக் கஷாயமிட்டும் கொடுக்கலாம். உடல் முழுவதும் மோரில் குழப்பிய தான்றித்தோல் குழம்பைத் தடவி வர வீக்கம் அரிப்பு சிகப்பு தடிப்பு குறையும். கொள்ளு, தயிர், எண்ணெய் ஒத்தடம் கொடுத்தல் இவைகளை நீக்கவேண்டும். தலையில் முலைப்பாலில் மஞ்சிட்டியை அரைத்துக் குழப்பித் துணியில் நனைத்துப்போட தலைவலி போகும்.

கிரகபீடை, ஏவல் இவைகளால் ஏற்படும் ஜ்வரத்தில் அவை களுக்கேற்ற பரிகாரம் செய்த பின் ஜ்வரத்திற்கு சிகித்ஸை செய் தல் நல்லது.

ஜ்வராதிகாரம் முற்றிற்று

நான்காவது அத்யாயம்

ரக்த பித்தம்.

மேல் நோக்கிய ரக்த பித்தத்தில்: திராக்ஷை நெல்லிமுள்ளி முதலிய ரத்தத்தையும் பித்தத்தையும் சீராக்கும் மிருதுவான விரேசனச் சரக்குகளைக் கொண்டு பேதிக்குக் கொடுக்கவும்.

கடுக்காய் நெல்லிமுள்ளி திராக்ஷை இவைகளின் கஷாயத்தை தேன் சர்க்கரை சேர்த்து பேதிக்குக் கொடுக்கலாம் பிறகு விஷ்ணுக்ராந்தி குங்குமப்பூ காரிலவம் மொட்டு இவைகளில் ஒன்றைப் பாலிலரைத்துக் கலக்கிக் கொடுக்கலாம். ஊமத்தை இலைச் சாற்றிற்கு நான்கு பங்கு நெய் கூட்டித் தேய்த்து நீர்வற்றிய பின்னர் அந்த நெய்யைத் தலையில் தடவி விடவும். பேய்ப் புடலின் சாற்றை வெண்ணெயுடன் சேர்த்துத் தேய்த்து நீர்வற்றிய பின் அதைத் தலையில் தடவ மூக்கிலிருந்து வெளியாகும் ரக்தபித்தம் தணியும.

காது வழியே வருவதற்கு வில்வ இலைச் சாற்றுடன் வெண்ணெய் சேர்த்து அகன்ற வாயுள்ள கிண்ணத்திலிட்டு தேய்த்து நீர் வற்றிய பின்னர் தலையில் தடவ நல்லது.

குறிப்பு:— நெய்யுடனோ வெண்ணெய்யுடனோ அதன் கால் பங்கு ஸ்வரஸம் சேர்த்து அகன்ற பாத்திரத்திலிட்டு கையால் தேய்த்துக் கொண்டேவர சில மணி நேரத்தில் அதிலுள்ள கைச் சூட்டால் நீர் சுண்டிவிடும் [பிறகு அதிலுள்ள நீர் முழுவதும் சுண்டிவிட்டதா என்று பரிசோதிக்க துணியை வர்த்தியாகச் சுருட்டி அதை நெய்யில் நனைத்து எரிய விடுவதும், அதில் சுடசுடப்பு இல்லாவிடில் நீர் வற்றியதாக அறிவதும் வழக்கம்.]

கண்களிலிருந்து வருவதற்கு, சிறுபுள்ளடிச் சாறு பிழிந்து துணியில் வடிகட்டி இளநீர் கலந்து தேத்தாங்கொட்டை அரைத்துக் கலக்கித் தெளிந்த பின்னர், கண்களில் தாரையிட நல்லது. அடபதியன் கிழங்குச் சாற்றுடன் நெய் சேர்த்துத் தேய்த்தெடுத்த நெய்யை தலையில் பூசுவதும் நல்லது.

ரக்தமாக வாந்தி ஏற்படின், ஸஹஸ்ரவேதியைப் பொடி செய்து வெண்ணெய்யில் குழப்பிச் சாப்பிடவும்.

பொதுவாக ஆலம் விழுது, சித்தாமுட்டி, விளாமுச்சம் வேர், ஆடாதோடைவேர் இவைகளைக் கஷாயமிட்டுப் பால் சேர்த்துக் கொடுக்கலாம்.

கீழ் நோக்கிய ரக்த பித்தத்தில் : தண்ணீர்விட்டான் கிழங்கின் கஷாயத்தைத் தேன் சேர்த்துக் கொடுக்க நல்லது.

மூத்திர மார்க்கத்தின் வழியே வெளிப்படின் ஓரிலை வேர், மூவிலை வேர், கண்டங்கத்திரி வேர், சிறுபூளை வேர், நெரிஞ்சில் வேர், சித்தாமுட்டி வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளைக் கொண்டு பால் காய்ச்சியோ, கஷாயம் தயாரித்தோ சாப்பிட நல்லது.

மலத் துவாரத்தின் வழியே வெளிப்படின் – காரிலவம் பிசினை ஆட்டுப் பாலில் கரைத்துக் கொடுக்கலாம்,

நன்னாரி அதிமதுரம் விளாமுச்சம் வேர், சிறு கீரை, வெட்டி வேர், திராக்ஷை, சந்தனம் பரச்சுண்டை வேர், நீலோத்பலக் கிழங்கு இவைகளைக் கஷாயமிட்டுத் தேனும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க எல்லாவித ரக்த பித்தமும் குறையும். இதில் நான்கில் ஒரு பங்கு தண்ணீர்விட்டான் கிழங்கு சேர்வது நல்லது.

ஆடாதோடை இலையை அரைத்து வெண்ணெய்யுடனும். புரசின்பட்டையை அரைத்து வெண்ணெய்யுடனும், ரக்தபோள இலையை அரைத்துப் பாலுடனும் சாப்பிட ரக்தபித்தத்தில் ஸித்தமான ஔஷதமாகும்.

சந்தனாதி கிருதம் : சந்தனம் ஒரு வீசையை இடித்து 12 படி ஜலத்தில் 3 படி மீதமாகக் காய்ச்சி வடிகட்டிய கஷாயம் ; பசுவின் நெய் ஒரு வீசை தண்ணீர்விட்டான் கிழங்கு முக்கால் படி, சந்தனத்தூள் (கல்கத்திற்காக) 15 தோலா, இவைகளைச் சேர்த்து முறைப் படி நெய் வடித்து உபயோகிக்க நல்லது

சதாவர்யாதி குடம் : தண்ணீர்விட்டான் கிழங்கு, சித்தாமுட்டி, நெல்லிக்காய் ஆடாதோடை வேர் இவை வகைக்கு 4 தோலா, ஒரு படி ஜலத்தில் கால் படி மீதமாகக் கஷாயம் செய்து சர்க்கரை 32 தோலா, நெய் 16 தோலா சேர்த்தும் பாகாகியபின் குகைநீர், நெரிஞ்சில்முள், அதிமதுரம், நிலப்பனைக் கிழங்கு, கோமூத்ர சிலாஜது, திப்பிலி, தார்தாவல் வேர், வெட்டிவேர் இவை வகைக்கு ஒரு தோலா இடித்துத் தூளாக்கித் துணியில் வடிகட்டிக் கலந்து வைத்துக் கொள்ளவும். ரக்த பித்த நோயில் மிகச் சிறந்த ஔஷதம்.

ரக்த பித்தம் மேல் நோக்கியதாக இருந்தால், ஸாத்ய மெனவும், கீழ் நோக்கியதானால் பத்யமுடனிருக்க கஷ்டப்பட்டு

சிகிச்சை செய்து உபத்ரவங்களில்லாமல் பாதுகாக்கலாமெனவும் இருவழிகளிலும் பிரவிருத்தித்தால் அஸாத்யமென்பதையும் வைத்யன் அறிந்து கொள்ளவும் வேண்டும்.

காஸ சிகித்ஸா

வாதகாஸம், பித்தகாஸம், கபகாஸம், க்ஷதகாஸம், சோஷ காஸம் என காஸம் ஐவகைப்படும். முறையே இவை பலமதிக முள்ளவை. இவை சரியாக சிகித்ஸை செய்யப்படாவிடில் சீக்கி ரத்தில் க்ஷய நோயாக மாறுமாதலால் உடன் தகுந்த சிகித்ஸை செய்யவேண்டும்.

பொது முறைகள் : ஆடாதோடையின் இலைகளை வறுத்து சமனெடை நெல் பொரி சேர்த்துத் தூள் செய்து சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நல்லது

முள்ளுக் கத்திரியின் வேரை அரைத்துத் தேனிட்டுச் சாப் பிட்டாலும் அதையே அரைத்துக் கலக்கி மோர்க்கடி செய்து சாப் பிட்டாலும் நல்லது

முக்காப்பீரகத்தியிலைச் (மலையாளப் பெயர்) சாற்றில் பழைய வெல்லம் சேர்த்து காலையில் சாப்பிட எல்லாவித காசங்களும் சமனமடையும்.

வ்யோஷாதி சூர்ணம் : சுக்கு மிளகு திப்பிலி இவைகளுக்குச் சமம் ஆடாதோடை இலை (நிழலிலுலர்த்தப்பட்டது) இவைகளைத் தூள் செய்து தேன் சர்க்கரைச் சேர்த்துச் சாப்பிடலாம்.

குடசுண்டீ : சுக்கு ஒரு பங்கு, வெல்லம் 2 பங்கு வருத்த எள்ளு 4 பங்கு இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து ஒன்ருகி நைந்தவுடன் எடுத்து வைத்துக்கொள்ளவும். தினம் காலையிலோ அல்லது தேவைக்கேற்ப அடிக்கடியோ சாப்பிட காசங்கள், அரோசகம், வாந்தி, குல்மம், உரக்ஷதம், குடல் வாயு இவை போகும் பசி நன்கு எடுக்கும்.

லாஜாமலகாதி சூர்ணம் : நெல் பொரி, நெல்லி முள்ளி, திப்பிலி, சுக்கு, கடுக்காய் இவைகளை சமனெடை இடித்துத் தூள் செய்து சர்க்கரை சேர்த்து தேன் நெய்யுடன் சேர்த்துச் சாப்பிடலாம்.

லாஜவிச்வாதி சூர்ணம் : நெல் பொரி, சுக்கு, கடுக்காய், திப்பிலி, நெல்விமுள்ளி இவை வகைக்கு ஒரு தோலா, ஜீரகம் 5 தோலா நிலவேம்பு 10 தோலா, சர்க்கரை 20 தோலா இவைகளை இடித்துச் சூர்ணம் செய்து காலையிலோ மாலையிலோ அல்லது அடிக்கடியோ தேவைக்கேற்ப சாப்பிட எல்லாவித காஸங்களும் அடங்கும்.

வ்யோஷாதி கஷாயம் : சுக்கு, திப்பிலி, மிளகு, கீழ்காய்நெல்லி, அதிமதுரம், சிறுதேக்கு இவைகளை வகைக்குச் சமனெடை சேர்த்து கஷாயமிட்டுச் சாப்பிட நல்லது.

வாஸாதி கஷாயம் : ஆடாதோடை வேர், பொன்னுவீரத்தின் வேர், கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சுக்கு, கொத்துமல்லி, சிறுதேக்கு, மஞ்சள், திப்பிலி இவைகளைக்கஷாயமிட்டு வடிகட்டி சர்க்கரை ஜீரகத்தூள் சேர்த்துச் சாப்பிடலாம். அல்லது தசமூல கஷாயமோ ஆடாதோடைவேர் கஷாயமோ நல்ல பலன் தரும்.

கூஷ்மாண்ட ரஸாயனம் : முற்றிய பூசனிக்காய் தோல்விதை நீக்கி 400 தோலா எடுத்து வேகவைத்துப் பிழிந்தெடுத்து அந்த சக்கையை நெய் 64 தோலா விட்டு வதக்கி தேன் நிறமடையும் வரை வறுத்து எடுத்துக்கொள்ளவும். முன் பிழிந்தெடுத்த திரவத்தில் 100 தோலா சர்க்கரை சேர்த்து முன் வறுத்ததை எடுத்து பூசனிக் கல்கத்தையும் நெய் 32 தோலாவும் சேர்த்துப் பாகு காய்ச்சவும் பாகான பின் அதில் திப்பிலி ஜீரகம் சுக்கு இவை வகைக்கு 8 தோலா, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, கொத்துமல்லி விதை, மிளகு இவை வகைக்கு 2 தோலா. இவைகளை நன்கு சூக்ஷ்ம சூர்ணமாக்கிக் கலந்து ஆறின பின் தேன் 32 தோலா விட்டு மத்தினால் இடித்துக் கிளறி வைத்துக் கொள்ளவும். இது காஸம், விக்கல், அரோசகம், க்ஷயம், ச்வாஸம், ரக்தபித்தம் இவைகளைப் போக்கும். மேதை ஞாபகசக்தி பலம் இவைகளை வளர்க்கும். ஹிருதயத்திற்கு பலமும், மார்பகத்திற்கு தென்புமளிக்கும்.

கர்பூராதி சூர்ணம் : பச்சைக்கர்பூரம், பச்சிலை, தக்கோலம், வெள்ளை லோத்திரப்பட்டை, ஜாதிக்காய் இவை வகைக்கு ஒரு தோலா திப்பிலி, லவங்கப்பட்டை, மிளகு, சிறுநாகப்பூ, சுக்கு இவை வகைக்கு 2 தோலா, இவைகளைப் பொடியாக்கி சமனெடை சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வாய்க்கு ருசியும் ஹ்ருதயத்திற்கு ஹிதமுமளிக்கும் தொண்டைக்கம்மல், க்ஷயம், வாந்தி, இருமல் நீங்கும். குல்மம், மூலம், சுவாசம், வாந்தி, தொண்டைவலி இவை போகும். ஆகாரத்துடன் கலந்துசாப்பிட அன்னத்வேஷம் நீங்கும்'

அமிருதாதி தைலம்: சீந்திற்கொடி, ஆடாதோடையிலை, கருநொச்சியிலை, கையாந்தகரை, மலையமுக்கி, முக்காப்பீரகத்திலை, மூங்கிலைக் குருத்து இவைகளை சமஎடை சேர்த்து இடித்துச் சாறு 4 பங்கு, நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் 1 பங்கு, ஜடாமாஞ்சி, கோஷ்டம், நன்னாரி, தேவதாரு, சந்தனம், கடுக்காய், கடுகுரோகிணி, கொம்பரக்கு, அதிமதுரம், வெள்ளைக் குங்கிலியம் இவைகளைக் கல்கமாக்கி (எண்ணெய்க்கு 4 அல்லது 8-ல் ஒரு பங்கு) கலக்கி தைலம் வடிக்கவும்.

காஸம் சுவாஸம் உள்ளவர்க்கு ஸ்னானம் செய்விக்க மிக நல்லது.

வாஸாகிருதம்: ஆடாதோடை சமூலம் இடித்துப் பிழிந்த சாறு 4 பங்கு. நெய் 1 பங்கு ஆடாதோடைப்பூ $\frac{1}{4}$ பங்கு (கல்கமாக) இவைகளைக்கொண்டு நெய் காய்ச்சி வடிகட்டி, தேன் சேர்த்து சாப்பிட்டு வர, சுவாஸ காஸங்கள் போகும்

சுவாஸமும் விக்கலும்

சுவாஸமும் விக்கலும் ஒரேவித காரணங்களால் ஏற்படுபவை யாதலால் அவைகளின் சிகிச்சையும் ஒருவகைப்பட்டதே.

நயோபாய கஷாயம்: சித்தாமுட்டி வேர் 10 பங்கு, ஜீரகம் 2 பங்கு, சுக்கு 2 பங்கு இவைகளைக் கஷாயமிட்டுச் சாப்பிடலாம்.

பலாஜீரகாதி கஷாயம்: சித்தாமுட்டி வேர், ஜீரகம், கோரைக் கிழங்கு, கரும்பு, பொரி, வில்வவேர், சுக்கு, தேவதாரு, மூவிலை வேர், ஆடாதோடை வேர் இவை சம எடை எடுத்துக் கஷாய மிட்டு, திப்பிலித்தூள் தேன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க நல்லது இந்த திரவியங்களைக் கொண்டே ஆட்டின் பாலைக் காய்ச்சி வடிகட்டி சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நல்லது.

பலாராஸ்னாதி கஷாயம்: சித்தாமுட்டி வேர், சித்தரத்தை, கரும்பு, நிலவேம்பு, யானைவணங்கியிலை, அதிமதுரம் இவைகளைக் கொண்டு கஷாயமிட்டு தேன் சேர்த்து சாப்பிடலாம்.

நிர்குண்டியாதி கஷாயம் : கருநொச்சிவேர், சித்தரத்தை, வசம்பு, நிலவேம்பு, சுக்கு இவைகளைக்கொண்டு கஷாயம் செய்து தேன் சேர்த்து சாப்பிட ஜ்வரத்துடன் கூடிய சுவாஸமும் விக்கலும் நீங்கும்.

திப்பிலி ரஸாயனம் :- திப்பிலியரிசி 8 தோலா எடுத்து சங்கின் இலைச்சாற்றில் ஒரு நாள் ஊரவைத்து மறுநாள் காயவைக்கவும். இவ்விதம் வேலிப்பருத்தியிலைச்சாறு, முள்ளுக்கத்திரி இலைச்சாறு, புல்லானி (மலையாளப் பெயர்) இலையின் சாறு, கருநொச்சி இலைச் சாறு எருக்கிலைச்சாறு பொன்னுவீர இலைச்சாறு, ஆடாதோடை இலைச்சாறு, முசுமுசுக்கையிலைச்சாறு, ஆட்டுப்பால் இவைகளில் முன்போல தனித்தனியே ஊரவைத்துக் காயவைக்கவும். பிறகு தூள் செய்து மூங்கில் பாத்திரத்தில் வைத்து தேன் சர்க்கரை சேர்த்து சாப்பிட சுவாஸம் காஸம் நீங்கும்.

(தொடரும்)

FOR
ALL YOUR REQUIREMENTS
OF
MUSK, SAFFRON, KANMADAM
(SHILAJIT) AND INDIAN HERBS ETC.

Please Contact :

PURI BROTHERS (REGD.)
MUSK MERCHANTS
JULLUNDUR-1

Grams : "VENKATESH" Phone : **3923**

இம்ப்காப்ஸ்

பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிராக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:
4/196, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோவில் தெரு, கல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP./747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.